# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2111 - 2019 පෙබරවාරි මස 15 වැනි සිකුරාදා - 2019.02.15

*2111 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2019, மாச்சு மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்காணி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


2187 - B81497 - 5,403 (2019/02)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாணத்தின் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில மொழி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மாவட்ட அடிப்படையில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 - 1 (இ) தரத்திற்கு மாவட்ட அடிப்படையில் டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019

வடமேல் மாகாண மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் ஆங்கில மொழி ஆசிரியர் வெற்றிடங்களுக்காக வடமேல் மாகாண சபை ஆசிரியர் சேவை யாப்பின் 3 - 1 (இ) தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக இலங்கை உயர் தொழில்நுட்ப கற்கை நிறுவகத்தின் (SLIATE) மூலம் வழங்கப்படும் தேசிய உயர் ஆங்கில டிப்ளோமா (முழு நேர /பகுதி நேர ) பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ள வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவைக் கொண்ட 40 வயதுக்கு மேற்பட்ட 43 வயதுக்குக் குறைந்த ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறிப்பு : 2018.11.23 ஆந் திகதியுடைய 2099 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் IV (அ) மாகாண சபைப் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி பதவிக்கான ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தலின் படி விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மீள விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

1. சேவை முன்னுரிமை மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

2. **தகைமைகள்**

2.1. பொதுவான தகைமைகள் :

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) நற்பண்புகளைக் கொண்டவராகவும் சிறந்த தேகாரோக்கியம் மிக்கவராகவும் காணப்பட வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்தது அண்மிய 03 வருடங்கள் வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவாளராக இருக்க வேண்டும். (பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் கூடிய கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைத்து உறுதி செய்தல் வேண்டும். )

(iv) எல்லா விண்ணப்பதாரிகளும் வடமேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

(vi) 2018.12.31 ஆம் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எல்லா தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

2.2. கல்வித் தகைமைகள் :-

கீழ்வரும் (1), (2) மற்றும் (3) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

( 1 ) இலங்கை உயர் தொழில்நுட்ப கற்கை நிறுவகத்தின் (SLIATE ) மூலம் வழங்கப்படும் தேசிய ஆங்கில டிப்ளோமா (முழு நேர /பகுதி நேர ) சான்றிதழைப் பெற்றிருத்தல்.

( 2 ) பின்வரும் (i), (ii), (iii) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

(i) ஆங்கிலப் பாடம் உட்பட க.பொ.த. ( உ.த ) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

(ii) க.பொ.த. ( உ.த. ) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் க.பொ.த. ( சா.த.) பரீட்சையில் ஆங்கில இலக்கிய நயத்தில் சாதாரண சித்தி மற்றும் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(iii) க.பொ.த. ( உ.த. ) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் க.பொ.த. ( சா.த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் விசேட சித்தி அல்லது அதி விஷேட சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

( 3 ) க.பொ.த. ( சா.த. ) பரீட்சையில் சிங்களம் அல்லது ஆங்கிலப் பாடத்துடன் கணிதப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு :-

( அ ) உயர் தர புதிய பாடத் திட்டத்தின் கீழ் பொது ஆங்கிலம் மற்றும் பொது சாதாரண பாடங்கள் ஒரு பாடமாக கருதப்பட மாட்டாது.

( ஆ ) சகல டிப்ளோமாதாரிகளும் 2018.12.31 ஆந் திகதிக்கு டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

**3. சேவை நிபந்தனைகள் :-**

அரசாங்க /மாகாண அரசாங்க சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், வடமேல் மாகாண சபை ஆசிரியர் சேவை யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அந்த யாப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் 1 (இ) வகுப்புக்கு நியமிக்கப்படுவார்கள்.

3.1. சம்பள அளவுத் திட்டம்.

இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் 2016.02.25 ஆந் திகதிய இலக்கம் 03/2016 கொண்ட அரச நிர்வாக சுற்று நிருபம் I இன் GE 1 – 2016 இன் அடிப்படையில் ரூ. 27,740.00 -6x300 - 7x380 - 2x445- ரூ. 33,090 ஆகும். (2020.01.01 ஆந் திகதி வரை மேற் கூறப்பட்ட சுற்று நிருபத்தின் உப பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் வழங்கப்படும். )

3.2. இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியம் தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

3.3. வடமேல் மாகாண, மாகாண அரசாங்க சேவையின் ஆசிரியர் சேவை யாப்பின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

3.4. முதல் நியமனம் பெறும் மாவட்டத்தில் குறைந்த பட்சம் ஆறு ( 06 ) ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் என்பதுடன், தான் முதல் நியமனம் பெறும் பாடசாலை கஷ்ட /அதி கஷ்டப் பாடசாலை அற்ற போது தமது சேவைக் காலத்தினுள் எச்சந்தர்ப்பத்திலும் ஆகக் கூடியது ஐந்து ( 05 ) ஆண்டுகள் கஷ்ட /அதி கஷ்டப் பாடசாலைகளில் பணியாற்ற வேண்டியது கட்டாயமானதாகும்.

3.5. 2014.01.21 ஆந் திகதிய அ.நி.சு 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் பணியிலமர்ந்து 05 வருடங்களுக்குள் பதவிக்கு விதிக்கப்பட்டுள்ள இரண்டாம் தேசிய மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

3.6. இந்தப் பதவிக்கு நியமனம் செய்தல் /பதவி உயர்வு வழங்குதல் செயற்கோவையின் விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிசார் விதிமுறைகளுக்கும் வடமேல் மாகாண நிதி ஒழுங்குக் கோவையின், வடமேல் மாகாண ஒழுக்காற்றுக் கோவை, வடமேல் மாகாண சபை ஒழுங்கு விதிமுறைகள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

**4. ஆட்சேர்ப்புச் செய்தல்**

4.1. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை

(i) வடமேல் மாகாண, மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில மொழிப் பாட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமை கொண்ட ஆங்கில டிப்ளோமாதாரிகள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

(ii) குருநாகல் மாவட்டத்தில் உள்ள மாகாண பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு அம்மாவட்டத்தில் வசிப்பவர்களும், புத்தளம் மாவட்டத்தில் உள்ள மாகாண பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு அம்மாவட்டத்தில் வசிப்பவர்களும் மாவட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

(iii) தெரிவு செய்து கொள்வதற்காக எழுத்து மூலப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கும், செயன்முறைச் சோதனை ஒன்றுக்கும் உள்ளாக்கப்பட்டு திறமையின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு இணைத்துக் கொள்ளப்படுவார்கள். எனினும், ஒரு மாவட்டத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்குப் போதுமானவர்கள் இல்லாத போது மற்றைய மாவட்டத்தில் தகைமை பெற்றோரில் இருந்து முன்னுரிமை பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

4.2. எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை

இப்பரீட்சை ஆங்கில மொழி மூலம் மாத்திரமே நடைபெறும். இப் பரீட்சை பின்வரும் இரு வினாப் பத்திரங்களைக் கொண்டது என்பதுடன், சகல விண்ணப்பதாரிகளும் இரு வினாப் பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும்.

| பாடம் | காலம் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற்காகப் பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| பொது உளச் சார்பு | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| பொது அறிவுப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |

பாடத் திட்டம்

பாட இலக்கம் 01 - பொது உளச் சார்புப் பரீட்சை

விண்ணப்பதாரியின் திறன்கள், தர்க்கத் திறன் என்பவற்றை மதிப்பீடு செய்யும் நோக்கில் இந்த வினாப் பத்திரம் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு அல்லது குறு விடை வினாக்கள் 50 ஐ உள்ளடக்கி இருக்கும். இந்த சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். (ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் )

பாட இலக்கம் 02 - பொது அறிவு

விண்ணப்பதாரியின் சமூக, பொருளாதார, அரசியல் துறைகள் தொடர்பில் பொது அறிவைப் பரீட்சிக்கும் பல்தேர்வு வினாக்கள் 50 ஐக் கொண்டிருக்கும். (ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் )

4.3. நேர்முகப் பரீட்சை

இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப்பூர்த்தி செய்திருக்கிறாரா என்பதைப் பரீட்சித்தல், உடல் தகைமை மற்றும் உளத் தகைமையைப் பரீட்சித்தல், மேலதிக தகைமைகளுக்கு புள்ளிகளை வழங்குதல் என்பவற்றுக்காக நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

மேலதிக தகைமைகளுக்குப் புள்ளிகளை வழங்குதல் ( 10 புள்ளிகள் )

| தொடர் இல | நியதிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01 | தம்ம பாடசாலை இறுதிப் பரீட்சை சான்றிதழ் அல்லது ஏனைய மதங்களில் அதற்குச் சமனான பரீட்சையில் சித்தியடைந்திருப்பதாக ஏற்றுக் கொள்ளத்தக்க சான்றிதழ் | 05 |
| 02 | விளையாட்டு, அழகியல் போன்ற இணைப்பாட விதான செயற்பாடுகளில் அரசின் அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய மட்டத்திலான முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலை வெற்றிகளுக்கான சான்றிதழ் அல்லது சான்றிதழ்கள் சில. | 05 |
| | மொத்தப் புள்ளிகள் | 10 |

4.4. செயல்முறைப் பரீட்சை - (15 புள்ளிகள்)

ஆசிரியத் தொழிலிற்கு முக்கியத்துவம் மிக்க கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டுக்கு விண்ணப்பதாரி கொண்டுள்ள கருத்து வெளியீட்டு திறமை, தொடர்பாடல் திறமை தொடர்பில் விஷேடமாக அவதானம் செலுத்தப்படும். செயல்முறைப் பரீட்சைக்காக விண்ணப்பதாரியினால் இனம் காணப்பட்ட தலைப்பொன்றின் கீழ் ஆங்கில மொழியில் பத்து ( 10 ) நிமிடங்களுக்கு அதிகரிக்காத காலப் பகுதியினுள் நிகழ்த்துகை ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

5. **தெரிவு செய்யும் முறை**

( அ ) ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் விண்ணப்பித்த குறித்த மாவட்டத்தில் நிலையாக வசிக்கும் விண்ணப்பதாரிகளில் எழுத்து மூலப் பரீட்சையில் இரண்டு பாடங்களிலும் சித்தியடைந்த நபர்களில், அவர்கள் காட்டிய திறமை அடிப்படையில் வரிசைப்படுத்தி குறித்த மாவட்டத்தின் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

( ஆ ) அந்த நேர்முகப் பரீட்சையில் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள், நேர்முகப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் என்பவற்றின் கூட்டுத் தொகையின் வரிசைப் படி வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு ( 02 ) செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

( இ ) எழுத்துப் பரீட்சைப் புள்ளி, நேர்முகப் பரீட்சைப் புள்ளி மற்றும் செயன்முறைப் பரீட்சைப் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் குறித்த மாவட்டத்தின் தகைமை பெற்றவர்களின் தகைமை வரிசை தீர்மானிக்கப்படும். அந்த வரிசையில் அதிக திறமைகளைக் காட்டியவர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

( ஈ ) ஒரு மாவட்டத்தில் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு முடிவடைந்த பின்னரும் வெற்றிடங்கள் காணப்படுமாயின் மற்றைய மாவட்ட விண்ணப்பதாரிகளில் இருந்து முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

6. **பரீட்சைக் கட்டணம்**

பரீட்சைக் கட்டணமாக ரூ. 600.00 ஐ வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வரவு வைக்கப்படுமாறு செலுத்தப்பட வேண்டும். வடமேல் மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் தமது நிலையான வதிவைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் அந்த நிதியைச் செலுத்த வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட வ.மே.மா.ச.நி 2 பற்றுச் சீட்டினை தவிர, வேறு நிறுவனங்களில் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது. ( பற்றுச் சீட்டின் நிழற் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் எதிர் காலத்தில் பயன்படலாம் ). எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் இந்தப் பரீட்சைக் கட்டணம் வேறு எந்தப் பரீட்சைக்கும் பயன்படுத்துவதற்கு மாற்றப்பட முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

7. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**

(i) இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக A4 ( 21 x 29 செ.மீ ) தாளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும்.

(ii) மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவில்லாத, பூரணமற்ற தகவல்களைக் கொண்ட மற்றும் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததா என்பது தொடர்பில் விண்ணப்பதாரி அவதானம் செலுத்த வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற் படப்பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

(iii) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமான ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு ஒருவர், முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ. 32,960.00 இக்கு மேற்பட்ட ஆரம்ப அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தர அரச/மாகாண அரச சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7.1 விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல்.

முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2019.03.08ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். இத்திகதியின் பின்னர் கிடைக்கும் எந்த ஒரு விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.

விண்ணபத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடமேல் மாகாண ஆசிரியர் சேவைக்கு ஆங்கில டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2019" என்பதுடன், வதிவிட மாவட்டத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.

7.2 இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக அமையாத அல்லது பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக வழங்கப்படும் அனுமதிச் சீட்டு விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கான தகைமையைக் கொண்டிருக்கின்றார் என்பதை ஏற்றுக் கொண்டதாக அமையாது. தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய ஆவணங்களின் மூலப் பிரதிகளுடன் நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்கப்படல் வேண்டும். சகல தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**8 பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் சகல பாடங்களிற்காகவும் ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்களின் மூலம் மேற்பார்வையாளருக்கு உறுதி செய்ய வேண்டும் :-

( அ ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
( ஆ ) செல்லுபடியான கடவுச் சீட்டு

***குறிப்பு** :-* பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்தி ஒருவர் தன்னுடைய ஆளடையாளத்தை உறுதி செய்யத் தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்ற தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

9. விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். அந்தத் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றப்பட இடமளிக்கப்பட மாட்டாது. இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என அறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்துவத்தை செல்லுபடியற்றதாக்க முடியும். விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்படும் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போலியானது எனக் கருதப்படின் அவர் வடமேல் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிச் சீட்டு கிடைத்தலானது அவர் குறித்த பதவிக்கு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமையை ஏற்றுக் கொண்டமையாகக் கருதப்படமாட்டாது.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரால் பரீட்சைக் கால அட்டவணையுடன் அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட உடனேயே வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழுவின் அலுவலக இணையத் தளத்தில் ( www.psc.nw.gov.lk ) அறிவித்தல் விடுக்கப்படும். பரீட்சை அறிவித்தல் வெளியிடப்பட்டு 03 நாட்கள் கழிந்த பின்னரும் பரீட்சை அனுமதிச் சீட்டு கிடைக்கப் பெறாதவர்கள் அது தொடர்பில் உடனடியாக "செயலாளர் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது பின்வரும் விபரங்களை வழங்க வேண்டும்:

(i) பரீட்சையின் பெயர்;
(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர்;
(iii) முகவரி;
(iv) தேசிய ஆள்அடையாள அட்டை இலக்கம்;
(v) விண்ணப்பத்தை தபாலிலிட்ட தபால் அலுவலகம், பதிவு எண், அனுப்பிய திகதி.

11. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் தொடர்பில் அல்லது அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக கருதப்படும்.

12. இந்தப் பரீட்சையை நடாத்துதல், நடாத்தாது விடுதல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல் அல்லது தெரிவு செய்யாமல் விடுதல் வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்றவை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும். இந்த அறிவித்தலில் ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டில்லாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் விளக்குதல் /தீர்மானம் எடுக்கும் உரிமை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

13. சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் சொற்றொடர்களிடையே இணக்கமின்மைகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படுமாக இருப்பின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2019, பெப்புருவரி 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

( அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம் )

**வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆங்கில மொழி ஆசிரியர் வெற்றிடங்களுக்காக மாவட்ட அடிப்படையில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் 1 ( இ ) வகுப்பிற்கு டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019**

1. நிரந்தர வதிவு

| | |
|---|---|
| வதியும் மாவட்டம் | |
| பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் | ஆங்கிலம் |

2.

2.1. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழில் ) :
திரு./திருமதி/செல்வி ..........................................................................................................

2.2. முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில் ) :
Mr./Mrs./Ms. : ..........................................................................................................

2.3. முழுப் பெயர் ( சிங்களம் /தமிழில் ) :- திரு./திருமதி/செல்வி
..........................................................................................................

2.4. முழுப் பெயர் ( ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில் ) :- Mr./Mrs./Ms. :
..........................................................................................................

2.5. தேசிய ஆளடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.

3.1. நிரந்தர முகவரி ( சிங்களம் /தமிழில் ) :
..........................................................................................................

3.2. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில் ) :
..........................................................................................................

3.3. பரீட்சை அனுமதிச் சீட்டு அனுப்ப வேண்டிய முகவரி :
..........................................................................................................

3.4. தொலைபேசி இலக்கம் :-கையடக்க :......................................
வதிவிடம் :......................................

4.

4.1. பால் : பெண் - F ஆண் - M ☐
( உரிய எழுத்தை கூட்டினுள் எழுதுக.)

4.2. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

4.3. 2018.12.31 ஆந் திகதிக்கு வயது :- வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.4. விவாக அந்தஸ்து : திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2
(உரிய எழுத்தை கூட்டினுள் எழுதுக.) ☐

5.

5.1. வதிவிடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு : ..........................................

5.2. கிராம அலுவலர் பிரிவு : .........................................

5.3. 2018.12.31 ஆந் திகதிக்கு வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவு :
வருடங்கள் : ......... மாதங்கள் : ........ நாட்கள் : ..........

6. கல்வித் தகைமைகள் :

6.1. க.பொ.த. ( சா.த. ) பரீட்சை தொடர்பான விபரம் :
முதலாம் அமர்வு : வருடமும் மாதமும் : ............ பரீட்சைச் சுட்டெண்: ..............
இரண்டாம் அமர்வு : வருடமும் மாதமும் : ............பரீட்சைச் சுட்டெண்: ..............

| | பாடம் | 1 ஆம் அமர்வு பெற்ற சித்தி | 2 ஆம் அமர்வு பெற்ற சித்தி | | பாடம் | 1 ஆம் அமர்வு பெற்ற சித்தி | 2 ஆம் அமர்வு பெற்ற சித்தி |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | 06 | | | |
| 02 | | | | 07 | | | |
| 03 | | | | 08 | | | |
| 04 | | | | 09 | | | |
| 05 | | | | 10 | | | |

6.2. க.பொ.த. ( உ.த.) பரீட்சை தொடர்பான விபரம் :
வருடமும் மாதமும்: ...............................
பரீட்சை சுட்டெண் : ...............................

| | பாடம் | பெற்ற சித்தி |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |

6.3. உயர் கல்வித் தகைமைகள் தொடர்பான விபரங்கள் :

6.3.1. ஆங்கிலம் தொடர்பான டிப்ளோமா ( முழு /பகுதி நேர ) தொடர்பான விபரங்களைத் தரவும் :
..............................................................................................................

6.3.2. பாடநெறியைப் பயின்ற கல்வி நிறுவனம் : ..........................................................

6.3.3. கற்ற காலப் பகுதி : ..........................................................................

6.3.4. டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி : ...............................................................

7. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு தொடர்பான விபரம் :

7.1. பற்றுச்சீட்டு இலக்கம்: ................................ தொகை : ...................
திகதி : ..........................
வழங்கிய பிரதேச செயலகம் : .......................................

(பற்றுச் சீட்டினை கழறாதவாறு இங்கே ஒட்டவும்)

(விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமான ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு ஒருவர், முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ. 32,960.00 மேற்பட்ட ஆரம்ப அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரச/மாகாண அரச சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

8. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

................................................ ஆகிய என்னால் இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையிலும் உண்மையானதும் சரியானதும் என தெரிவித்துக் கொள்கிறேன். என்னால் வழங்கப்படும் இவ்வுறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் வடமேல் மாகாணத்தின் இலங்கை ஆசிரிய சேவையின் 3 - 1 (இ) தரத்திற்கு நியமிக்கப்படுவதற்காக எனது உரிமையை கருத்திற் கொள்ளாதிருப்பதற்கும் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் முடியும் என்பதை நான் நன்கு அறிவேன்.

திகதி : ..............................  ............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

9. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ........................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் ...................... ஆந் திகதி அவரின் கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :- ..................................................................
பதவி :- ..................................................................
முகவரி :- ..................................................................
திகதி :- ..................................................................

( உத்தியோகபூர்வ முத்திரையை பதியவும். )

02-827

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.